<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.92/2016</u>
<u>நாள்.25.03.2024</u>

2024ம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. S. ராஜீவ்காந்தி, இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = நாகராஜ் | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==========================================================

**<u>PW3 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன்.

ஆவணங்கள் குறியீடு இல்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் எந்த எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கட்டுப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து நான் எந்த ஆவணங்களும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதியை எனக்கு எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் 50 ஆண்டுகள் பழக்கம். வாதி கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை

பொறுத்த ஆவணங்களை எதையும் பார்க்காமல் நான் வாதி கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக வாதி தாவா சொத்தை குத்தகை சாகுபடி செய்கிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.